# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 02 வெள்ளிக்கிழமை 16.05.2025 கதிர் 196







# இனப்படுகொலை இல்லை என்பது இனவாதத்தின் வெளிப்பாடே!

## குமுதினிப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் சிறீதரன் தெரிவிப்பு







நெடுந்தீவு, மே 16


"ஈழத்தமிழர்கள் மீது இனப்படுகொலை மேற்கொள்ளப்படவில்லை என்று கூறும் சிங்களப் பேரினவாதிகள், உலகத்தின் கண்களையும், மனச்சாட்சியையும் மறைக்கப் பார்க்கின்றார்கள். உண்மையில் ஈழத்தில் நடந்தது ,னப்படுகொலைதான். அதை இந்தச் சிங்களப் பேரினவாதிகள் 7

# முன்னாள் எம்.பி சரவணபவனிடம் 100 கோடி கோரி தமிழரசுக் கட்சியின் தொகுதிக் கிளை நோட்டீஸ்!



யாழ்ப்பாணம், மே 16

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி முன்னாள் அமைப்பாளரும், தற்போது தமிழ்த் தேசியப் பேரவையின் பங்காளிக்கட்சித் தலைவர்களில் ஒருவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் அண்மையில் பொதுவெளியில் ஆற்றிய உரை ஒன்றின் காரணமாகத் தமிழ் மக்களுக்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நற்பெயருக்கும் - குறிப்பாக அதன் வட்டுக்கோட்டைக் கிளைக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டமும் ஏற்பட்டுள்ளதனால் அதற்குப் பரிகாரமாக ரூபா 100 கோடி நஸ்டஈடு கோரி சட்டத்தரணி ஒருவரினால் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.**



KEERTHANA KAMALACHANDRAN
ATTORNEY-AT-LAW & NOTARY PUBLIC

KADDUVAN ROAD,
MALLAKAM
JAFFNA,
Sri lanka.
Email :keerthjeevi@gmail.com
077 366 2469

14.05.2025

திரு.ஈஸ்வரபாதம் சரவணபவன்
இல:105, இராச வீதி,
கோப்பாய்.

பதிவுத்தபால் மூலமாக

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளை சார்பாக தொல்புரம், சுழிபுரத்தைச் சேர்ந்த அக்கிளையின் உப தலைவர், திரு.சண்முகநாதன் ஜெயந்தன் அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இக்கேள்விக் கடிதம் எழுதப்படுகிறது;

1. கடந்த 2025 மே மாதம் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் YMCA மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் கூட்டத்தில் தாங்கள் பேசிய போது கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலை ஒட்டி வட்டுக்கோட்டையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் வாக்காளர்களுக்கு சாராயம் விநியோகித்ததாக கூறியுள்ளீர்கள்.
2. இப்படி தாங்கள் கூறியது ஊடகங்கள் மூலம் பரவலாகப் பகிரப்பட்டுள்ளது.
3. மேற்சொன்ன தங்களது குற்றச்சாட்டு, சமூகஊடகங்கள் மூலமாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பகிரப்பட்டுள்ளது.
4. இக் குற்றச்சாட்டு முற்றுமுழுதாக பொய்யானதும், எவ்வித ஆதாரமற்றதும், வேண்டுமென்றே எமக்கு களங்கம் ஏற்படுத்தும் தீய நோக்கோடு செய்யப்பட்டதாகும்.
5. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி இந்தநாட்டில் அதிஉயர்ந்த மதிப்பைப் பெற்ற அப்பழுக்கற்ற ஓர் அரசியல் கட்சி என்பதோடு அக்கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தாங்கள் விலக்கப்பட்டதன் காரணமாக இவ்விடயத்தில் மிகுந்த காழ்ப்புணர்வோடு செயல்பட்டுள்ளீர்கள்.
6. தங்களது மேற்சொன்ன பொய்யான குற்றச்சாட்டு காரணமாக தமிழ் மக்களுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நற்பெயருக்கும் களங்கமும், குறிப்பாக அதன் வட்டுக்கோட்டைக் கிளைக்கும் எனது கட்சிகாரருக்கும் ஈடு செய்யமுடியாததுமான நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.
7. மேற்சொன்ன இழப்புக்கள் ஈடு செய்யமுடியாதவையானாலும் அவற்றிற்கு ஓரளவு பரிகாரமாக எனது கட்சிக்காரர் 100 கோடி ரூபாவுக்கு மட்டுப்படுத்துகிறார்.
8. இக்கேள்விக் கடிதம் கிடைத்து 14 நாட்களுக்குள் ரூபா 100 கோடி எனது கட்சிக்காரருக்கு நீங்கள் செலுத்தவேண்டும். தவறினால் இத்தொகையை வட்டியோடும் வழக்குச் செலவோடும் பெற்றுக்கொள்ள வழக்குத் தாக்கல் செய்யுமாறு எனது கட்சிக்காரர் எனக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

சட்டத்தரணி

K.Keerthana LL.B (Hons)
Attorney-at-Law,Notary Public
Commissioner for oaths &
Regd.Company Secretary
Chunnakam
Mobile. 077 366 2469.

கடந்த 12ஆம் திகதி யாழ்ப்பாணம் வை.எம். சீ.ஏ மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ்கட்சியின் கூட்டத்தில் பேசிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன், கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி சபை தேர்தலை ஒட்டி வட்டுக்கோட்டையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் வாக்காளர்களுக்கு சாராயம் விநியோகித்ததாக கூறியமைதொடர்பிலேயே, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளை சார்பாக தொல்புரம், சுழிபுரத்தைச் சேர்ந்த அக்கிளையின் உப தலைவர், திரு.சண்முகநாதன் ஜெயந்தனின் அறிவுறுத்தலின் அடிப்படையில் கீர்த்தனா கமலச்சந்திரன் என்ற சட்டத்தரணியினால் ரூபா 100 கோடி நஸ்டஈடு கோரிக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில், "முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரின் கருத்து முற்றுமுழுதாக பொய்யானதும், எவ்வித ஆதாரமற்றதும், வேண்டுமென்றே எமக்கு களங்கம் ஏற்படுத்தும் தீய நோக்கோடு செய்யப்பட்டதாகும்.

இந்தப்பொய்யான குற்றச்சாட்டு காரணமாக தமிழ் மக்களுக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நற்பெயருக்கும் களங்கமும், குறிப்பாக அதன் வட்டுக்கோட்டைக் கிளைக்கும் எனது கட்சிகாரருக்கும் ஈடு செய்யமுடியாததுமான நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட இழப்புக்கள் ஈடு செய்யமுடியாதவையானாலும் அவற்றிற்கு ஓரளவு பரிகாரமாக எனது கட்சிக்காரர் 100 கோடி ரூபாவுக்கு மட்டுப்படுத்துகிறார். இக்கேள்விக் கடிதம் கிடைத்து 14 நாட்களுக்குள் ரூபா 100 கோடி எனது கட்சிக்காரருக்கு நீங்கள் செலுத்த வேண்டும். தவறினால் இத்தொகையை வட்டியோடும் வழக்குச் செலவோடும் பெற்றுக்கொள்ள வழக்குத் தாக்கல் செய்யுமாறு எனது கட்சிக்காரர் எனக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்." என்று சட்டத்தரணி கீர்த்தனா கமலச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கான பரிந்துரைகளை முன்வைக்குமாறு அறிவிப்பு

## மக்களுக்கு நீதி அமைச்சு 14 நாள்கள் அவகாசம்




கொழும்பு, மே 16

இலங்கையில் நடைமுறையில் உள்ள 1979ஆம் ஆண்டு 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடை (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை இரத்துச் செய்து, புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான அமைச்சரவை 7

# பகிடிவதையால் பல்கலை மாணவன் சாவு: 10 மாணவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



கொழும்பு, மே 16

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்குள்ளாகி கடந்த ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 10 மாணவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு பலாங்கொடை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

10 மாணவர்களும் இன்று 7

# விபத்தில் ஐவர் காயம்




கொழும்பு, மே 16

கொழும்பு - கண்டி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று வியாழக்கிழமை இரவு 8:30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வான் ஒன்று வீதியை 7

# திருமலையில் உருக்குலைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் இன்று மீட்பு



திருகோணமலை, மே 16

திருகோணமலை, உப்புவெளி பொலிஸ்பிரிவுக்குட்பட்ட வரோதயநகர் பகுதியில் உள்ள வெற்றுக் காணி ஒன்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் ஒன்று இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

ஜின்னா நகர் பகுதியைச் சேர்ந்த எட்வேட் கோமர் (வயது 70) என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. 7

**- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -**

# கொள்கலன் விடுவிப்பு மோசடி! விமல் பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, மே .16

கொள்கலன் விடுவிப்பு மோசடியில் கிடைக்கப்பெற்ற பணம் எவ்வளவு என்பது தொடர்பில் கேள்வி எழுவதாகவும், அதில் கிடைக்கப்பெற்ற இலாபம் அநுரகுமாரவுக்கா? அல்லது வசந்த சமரசிங்கவுக்கா? சென்றடைந்தது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணி கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், அரிசி இறக்குமதியிலும் தற்போதைய அரசாங்கம் மோசடி செய்துள்ளனர். இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலாே அரிசிக்குக்கு 60 ரூபா வரி அறவிட்டால், இறக்குமதி செய்பவருக்கு எந்தளவு இலாபம் மீதமாகிறது?

அந்த இலாபத்தை இரண்டாக பிரித்து எங்கு அனுப்புகிறார்கள்?

அநுரகுமாரவுக்கா அல்லது வசந்த சமரசிங்கவுக்கா? கொள்கலன் விடுவிப்பு மோசடியில் கிடைக்கப்பெற்ற பணம் எவ்வளவு என யாருக்கும் தெரியாது.

அண்மைக்காலத்தில் இடம்பெற்ற பாரிய பண மாசேடி இதுவாகும்.

மற்றவர்களின் குறைகளை தேடிக்கொண்டும், கதைத்துக்கொண்டும் இருக்கும் கிணற்றடியில் கலந்துரையாடும் ஒரு அரசாங்கமாகும். இதனைத் தவிர 7 மாதங்களில் இவர்கள் எதை செய்திருக்கிறார்கள் என கேட்கிறேன்.

அதனால் மக்கள் இவர்கள் மீது பாரிய நம்பிக்கை வைத்தே வாக்களித்தார்கள். வணங்கப்போன விகாரை தலையில் இடிந்து விழுந்தால் ஏற்படுகின்ற கோபம், வேறு ஒரு இடத்தில் இடிந்து விழுவதைவிட அதிகமாகும்.

மஹிந்தானந்தவின் நீதிமன்ற விவகாரம்: எதிர்வாதங்களை சமர்ப்பிக்க உத்தரவு

மஹிந்தானந்தவின் நீதிமன்ற விவகாரம்: எதிர்வாதங்களை சமர்ப்பிக்க உத்தரவு

உள்ளூராட்சி மன்ற தேர்தல்

மேலும், உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அதிகமான சபைகளுக்கு எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை.

இந்நிலையில் யார் ஆட்சி செய்தாலும் அவர்களுக்கு ஏனைய கட்சிகளின் ஆதரவு தேவைப்படுகிறது. அதனால் அவ்வாறன சபைகளை ஆளும் அரசாங்கம் ஆட்சி செய்வதாக இருந்தால், அவர்களுக்கு ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை.

அதேநேரம் எதிர்க்கட்சியில் ஏதாவது கட்சி ஆட்சி அமைப்பதாக இருந்தால், அவர்களுக்கு நிபந்தனையும் ஆதரவளிக்க தயாராக இருக்கிறோம். (ஐ)

# எதிர்க்கட்சிகள் நிறுவும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு இல்லை



கொழும்பு. மே .16

சூழ்ச்சித் திட்டங்கள் மூலம் எதிர்க்கட்சிகளினால் நிறுவப்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாது என அமைச்சர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாது என தெரிவித்துள்ளார்.

வேறு விடயங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் தயாரில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளை மேற்கொள்வோரினால் ஆட்சி செய்யப்படும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய அரசாங்கத்திற்கு எவ்வித அவசியம் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

சிறு சிறு குழுக்கள் ஒன்றிணைந்து ஆட்சியை நிறுவுவதற்கு மக்கள் ஆணையளிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு சிறு சிறு குழுக்கள் ஒன்றிணைந்து ஆட்சியை அமைப்பது ஜனநாயக விரோதமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு மாநகரசபையின் மேயராக ட்ரோய் பல்தாசர் நியமிக்கப்படுவார் என்பதை எழுதி வைத்துக் கொள்ளுமாறு அமைச்சர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)



# இலங்கை சிறுவர்களுக்கு ஆபத்தாக மாறும் நோய்கள்



கொழும்பு, மே .16

இலங்கையில் சிறுவர்களிடையே தற்போது இன்ப்ளுாயன்ஸா, டெங்கு காய்ச்சல் மற்றும் சிக்குன்குனியா ஆகிய மூன்று நோய்களின் பாதிப்பும் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த விடுமுறை நாட்களில் சிறுவர்கள் அதிகமாக பயணம்செய்தமை மற்றும் அதிக கொண்டாட்டங்களில் ஈடுபட்டமையே இதற்கு காரணமாகும்.

இந்த வைரஸ் நோய்களில், இன்ப்ளுாயன்ஸாவின் பாதிப்பு அதிகமாக காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மழையுடனான காலநிலை மற்றும் நுளம்புகளின் அதிகரிப்பு காரணமாக பல தொற்று நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு நோய்களின் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிக்குன்குனியாவின் அறிகுறிகளில் காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, உடல் வலிகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில், மூக்கில் ஏற்படும் கறுப்பு நிற அடையாளம், கைகள் மற்றும் கால்களில் கருப்பு புள்ளிகள் ஆகியவை அடங்கும். சிக்குன்குனியா என்பது டெங்குவை உண்டாக்கும் இரண்டு வகையான நுளம்புகளால் பரவும் நோயாகும். மேலும், டெங்கு காய்ச்சலும் அதிகரித்து வருவதால், சுகாதாரத் துறை விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், இருமல் மற்றும் சளி போன்ற அறிகுறிகளுடன் காய்ச்சலும் சில நேரங்களில் காய்ச்சலாக இருக்கலாம்.

எனவே, அத்தகைய சிறுவர்களை, மாணவர்கள் கூடும் பிற இடங்களுக்கும் அனுப்புவதற்கு முன்பு, அவர்களை குணப்படுத்த நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# மனோ கணேசனுக்கு அநுர தரப்பு அழைப்பு



கொழும்பு, மே .16

பெரும்பான்மை இல்லாத இடங்களில் உள்ளூராட்சி மன்றங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு தனது கட்சிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

சில உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை நிறுவுவதற்கு தனது கட்சியுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அது தவறல்ல என்றும், தற்போதுள்ள தேர்தல் முறையின்படி அது ஜனநாயகம் என்றும், யாருக்கும் பெரும்பான்மை இல்லாத இடங்களில் அதிகாரத்தை நிறுவுவதற்கு தானும் தனது கட்சியும் தற்போது கலந்துரையாடி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு மாநகர சபை உட்பட யாருக்கும் பெரும்பான்மை இல்லாத நிறுவனங்களின் அதிகாரத்தை நிறுவுவதற்கான கலந்துரையாடலுக்குப் பிறகு ஊடகங்களுக்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார (ஐ).



# இராஜதந்திரிகளின் முக்கிய பொறுப்பு குறித்து ஜனாதிபதி கலந்துரையாடல்



கொழும்பு, மே .16

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றத்தின் செய்தியைச் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் செல்வதும், சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் நற்பெயரை மேம்படுத்துவதும் தூதுவர்களின் பொறுப்பாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

பல்வேறு நாடுகளுக்கான இலங்கையின் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுச் செல்லும் புதிய தூதுக்குழுத் தலைவர்களுடன் நேற்று (15.05.2025) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு சேவைகளை வழங்குவதில் முன்னணியில் இருந்து சிறப்புக் கவனத்துடன் பணியாற்றுமாறும், எந்தவித பாகுபாடும் இல்லாமல் நியாயமாக செயல்படுமாறும் புதிய இராஜதந்திரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

இலங்கைத் தூதரகத்தை, இலங்கையர்கள் தமது இடமாக உணரும் வகையில் செயற்படுமாறு சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டிற்கான தமது சேவையை செயற்றிறன் மிக்க வகையில் மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

வெளிநாட்டு நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கும், இலங்கையில் உள்ள தொழில் முனைவோர் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களைக் கண்டறிய உதவுவதற்கும் தேவையான ஒருங்கிணைப்பு இராஜதந்திர சேவையின் ஒரு பகுதியாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார குறிப்பிட்டார்.

அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பது தூதுவரின் முக்கிய பொறுப்பாகும் என்றும், அதற்கு தேவையான ஆதரவை வழங்க அரசு தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

இலங்கையில் நடந்த சில சம்பவங்களால் தூதுவர்கள் கடந்த காலங்களில் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர் என்றும், தற்போதைய அரசாங்கம் தூதுவர்களின் கௌரவத்தை பாதிக்கும் எவற்றையும் செய்யாது என்றும் எந்த நேரத்திலும் தூதுவர்களுக்கு அரசு துணை நிற்கும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

புதிய தூதுக் குழுத் தலைவர்களாக, இந்தியாவிற்கான இலங்கை உயர் ஸ்தானிகராக ஜீ. எம். கொலொன்னெ, பாகிஸ்தானுக்கான இலங்கை உயர் ஸ்தானிகராக ரியர் அட்மிரல் பிரெட் செனவிரத்ன, ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கை உயர் ஸ்தானிகராக எஸ். டீ. என். யூ. சேனாதீர, அமெரிக்காவின் நியூயோர்க் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதியாக ஜயந்த ஜயசூரிய, கியூபாவுக்கான இலங்கைத் தூதுவராக ஆர்.எம்.மஹிந்த ரத்நாயக்க, ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் பி. ஜனக் குமாரசிங்க, ஐக்கிய அரபு இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் அருஷா கூரே ஆகியோர் இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)


# ஆனையிறவில் தொடரும் போராட்டம் : பெருமளவில் குவிக்கப்பட்டுள்ள பொலிஸார்

ஆனையிறவு, மே .16

கிளிநொச்சி ஆனையிறவு உப்பள தொழிலாளர்களின் போராட்டத்தை அடுத்து அதிகளவான பொலிஸார் குவிக்கப்பட்டு அங்கு பதற்றமான ஒரு சூழல் உருவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஆனையிறவு உப்பளத்தில்பல்வேறு கோரிக்கைககளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்றும் போராட்டம இடம்பெற்ற நிலையில் அங்கு பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். முன்னதாக கிளிநொச்சி ஆனையிறவு உப்பளத்தில் கடந்த ஒன்பது வருடங்களுக்கு மேலாக பணியாற்றும் தற்காலிக பருவ கால ஊழியர்கள் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை ஆனையிறவு உப்பளத்தின் முன்பாக முன்னெடுத்து இருந்தனர்.

இந்தநிலையில், போராட்டத்தை தடை செய்யுமாறு கோரி நீதிமன்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





# டி.ஆர்.எப்., அமைப்பை பயங்கரவாத பட்டியலில் சேர்க்க இந்தியா தீவிரம்

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் தாக்குதல் நடத்திய டி.ஆர்.எப்., எனப்படும், 'தி ரெசிஸ்டென்ஸ் பிரன்ட்' அமைப்பை பயங்கரவாத பட்டியலில் சேர்க்கும்படி, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலை இந்தியா வலியுறுத்திஉள்ளது.

ஜம்மு - காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு, லஷ்கர்- - இ- - தொய்பாவின் கிளை அமைப்பான, 'தி ரெசிஸ்டென்ஸ் பிரன்ட்' பொறுப்பேற்றது. இந்த செயலுக்கு கண்டனம் தெரிவித்த ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில், 'இதற்கு காரணமானோர், நிதி அளிப்போர், ஆதரிப்போருக்கு சட்டப்படி தண்டனை வழங்க வேண்டும்' என, வலியுறுத்தியது.

இருப்பினும், தங்கள் அறிக்கையில் தாக்குதல் நடத்திய டி.ஆர்.எப்., அமைப்பின் பெயரை ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் அதிகாரிகள் குறிப்பிடவில்லை.



இதையடுத்து, ஐ.நா., பாதுகாப்பு கவுன்சிலின் பயங்கரவாத குழுக்களின் பட்டியலில் டி.ஆர்.எப்., அமைப்பை சேர்க்கும் முயற்சியை மத்திய அரசு முன்னெடுத்துள்ளது. இது தொடர்பாக, நம் நாட்டின் குழு ஒன்று ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் அதிகாரிகளை ஏற்கனவே சந்தித்து பேசியிருந்தது.

இந்த நிலையில், ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 1267ன் கீழ் அமைக்கப்பட்ட கண்காணிப்பு குழுவை, நம் நாட்டு பிரதிநிதிகள் நேற்று சந்தித்து பேசினர்.

அப்போது, பஹல்காம் தாக்குதலில் டி.ஆர்.எப்., பங்கு குறித்து விளக்கினர். அது தொடர்பான ஆதாரங்களையும் சமர்ப்பித்தனர். பின், ஐ.நா., சபையின்பயங்கரவாத எதிர்ப்பு அலுவலக துணை பொதுச்செயலர் விளாடிமிர் வோரோன்கோவ் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குழு நிர்வாக இயக்குநரகத்தின் உதவி பொதுச் செயலர் நடாலியா கெர்மன் ஆகியோரையும் சந்தித்து அவர்கள் பேசினர்.

ஐ.நா., பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம், 1267 என்பது பயங்கரவாத தடுப்பு நடவடிக்கைகளுக்காக எடுக்கப்பட்ட ஒரு தீர்மானம். இந்தத் தீர்மானம் பயங்கரவாதப் பணப்பரிமாற்றம், ஆயுதங்கள் பெறுவதை தடுக்க, குழுவை அமைத்து செயல்படும்.

பயங்கரவாதிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடையவர்கள் மீது பொருளாதாரத் தடைகள் விதித்து, நிதி மற்றும் ஆயுத உதவிகளை தடுப்பதில் இந்தக் குழு முக்கிய பங்காற்றும். நம் நாட்டு அதிகாரிகள் அளித்த ஆதாரங்கள் ஏற்கப்பட்டால், டி.ஆர்.எப்., அமைப்பு தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்படும். (ஐ)



# 'பாகிஸ்தானின் அணு ஆயுதங்களை சர்வதேச பாதுகாப்பில் விடவேண்டும்'

ஜம்மு - காஷ்மீரில் உள்ள பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக, ராணுவ அமைச்சர் ராஜ்நாத் சிங் நேற்று ஸ்ரீநகரில் பாதாமி பாக் கன்டோன்மென்ட் ராணுவ முகாமில் ஆய்வு செய்தார்.

உலகளவில் பயங்கரவாதிகளுக்கு எதிராக மிகப் பெரிய தாக்குதலை சமீபத்தில் நம் ராணுவம் நிகழ்த்தி காட்டியது.

எத்தனை பேர் பலியாகினர் என்பதை எண்ணும் பொறுப்பை எதிரிகளுக்கு கொடுத்துவிட்டோம்.

நம்முடைய நோக்கம் என்ன, அதை எவ்வளவு துல்லியமாக தாக்குதல் நடத்தினோம் என்பதை இந்த ராணுவ நடவடிக்கை வாயிலாக உலகுக்கு காட்டியுள்ளோம்.

அணு ஆயுத மிரட்டல்களுக்கு அஞ்சாமல் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம்.

அதே நேரத்தில் அணு ஆயுதத்தைப் பயன்படுத்துவோம் என்று பொறுப்பு இல்லாமல் பாகிஸ்தான் கூறியதையும் இந்த உலகம் பார்த்துள்ளது.

இந்த நேரத்தில் ஒரு கேள்வி எழுகிறது. இவ்வாறு பொறுப்பில்லாமல், முரட்டுத்தனமாக செயல்படும் பாகிஸ்தானிடம் உள்ள அணு ஆயுதங்கள் பாதுகாப்பாக இருக்குமா என்பதே அந்தக் கேள்வி.

இது தொடர்பாக, ஐ.ஏ.இ.ஏ., எனப்படும் சர்வதேச அணு சக்தி முகமை ஆய்வு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ)

# அழகிகள் காலை கழுவிய பெண்கள்: எதிர்க்கட்சிகள் ஆவேசம்

தெலுங்கானாவில், உலக அழகிப் போட்டிக்காக வந்துள்ள பெண்களின் கால்களை, உள்ளூர் பெண்கள் கழுவியதற்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆனால், விருந்தோம்பல் என தெலுங்கானா அரசு விளக்கம் அளித்துள்ளது.

தெலுங்கானாவில் முதல்வர் ரேவந்த் ரெட்டி தலைமையில் காங்., ஆட்சி நடக்கிறது. இங்கு வரும் 31ம் தேதி, 'மிஸ் வேர்ல்டு' எனப்படும் உலக அழகிப் போட்டியின் இறுதிச் சுற்று நடக்கிறது. இதில் பங்கேற்பதற்காக, 100க்கும் மேற்பட்ட அழகிகள், தெலுங்கானா வந்துள்ளனர். அவர்களை மாநிலத்தின் முக்கியமான சுற்றுலா தலங்களுக்கு அழைத்துச் செல்கின்றனர்.

அதன்படி, 'யுனெஸ்கோ'வால் உலக பாரம்பரிய சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட, தெலுங்கானாவின் முலுகு மாவட்டத்தில் பலம்பேட்டில் இருக்கும் ருத்ரேஸ்வரா எனப்படும் ராமப்பா கோவிலுக்கு, அழகிகள் சென்றனர்.


அங்கு, அவர்களை வரிசையாக அமர வைத்து, அவர்களின்



கால்களை உள்ளூர் பெண்கள், தண்ணீர் ஊற்றி கழுவி விட்டனர். அதிலும் சிலரது கால்களை துண்டால் உள்ளூர் பெண்கள் துடைத்தனர். இந்த செயலுக்கு, தெலுங்கானா எதிர்க்கட்சிகளான பாரத் ராஷ்ட்ர சமிதி, பா.ஜ., உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. இதற்கு, தெலுங்கானா காங்., அரசு வெளியிட்டுள்ள விளக்கத்தில், 'விருந்தினர்களை கடவுளாக பாவிக்கும் கொள்கையின்படி, நாம் பின்பற்றும் பாரம்பரிய நடைமுறை தான் இது.

'இதன் வாயிலாக, நம் சர்வதேச விருந்தினர்களுக்கு மிக உயர்ந்த மரியாதையை வழங்கி இருக்கிறோம்' என தெரிவித்துள்ளது. (ஐ)

# கர்நாடகாவில் 7 அதிகாரி வீடுகளில் கட்டுக்கட்டாக பணம், நகை பறிமுதல்



பெங்களூரு:கர்நாடக லோக் ஆயுக்தா அதிகாரிகள், நேற்று அதிகாலையே ஏழு அரசு அதிகாரிகளுக்கு சொந்தமான, 40 இடங்களில் சோதனை நடத்தினர். அனைவரின் வீடுகளிலும் கட்டுக்கட்டாக ரொக்கம், தங்க நகைகள், வெள்ளி பொருட்கள் மற்றும் சொத்து ஆவணங்கள் சிக்கின. கர்நாடகாவில், சொத்து குவிப்பு புகார்களில் சிக்கும் அதிகாரிகள் வீடுகளில், லோக் ஆயுக்தா போலீசார் அவ்வப்போது சோதனை நடத்தி வருகின்றனர்.

தட்சிண கன்னடா மாவட்டத்தின் சர்வே மேற்பார்வையாளர் மஞ்சுநாத், விஜயபுராவின் அம்பேத்கர் மேம்பாட்டு கார்ப்பரேஷன் அதிகாரி ரேணுகா சாதர்லே உள்ளிட்ட ஏழு அதிகாரிகள் வீடுகள் மற்றும் அலுவலகங்கள் என, 40 இடங்களில் நேற்று அதிகாலையே லோக் ஆயுக்தா போலீசார் சோதனையில் இறங்கினர்.

7 அரசு அதிகாரிகள் சம்பந்தப்பட்ட 40 இடங்களில் சோதனை!: லோக் ஆயுக்தா அதிரடியில் சிக்கிய நகைகள், பணம்

கலபுரகியின், அக்கமகாதேவி லே - அவுட்டில் உள்ள தாசில்தார் உமாகாந்தின் வீடு, அலுவலகம், பண்ணை வீடு உட்பட அவருக்கு சொந்தமான இடங்களில், கட்டுக்கட்டாக ரொக்கம், சொத்து ஆவணங்கள் சிக்கின. மேலும் பல அதிகாரிகள் வீடுகளில் தங்க நகைகள், சொத்து ஆவணங்கள், சொகுசு கார்கள் உள்ளிட்ட விலை உயர்ந்த பொருட்கள் சிக்கின.

'மேலோட்டமாக பார்க்கும் போது, அதிகாரிகள் சட்டவிரோதமாக சொத்துகள் வைத்திருப்பது தெரியவந்துள்ளது. இவற்றின் மதிப்பு எவ்வளவு என்பது, ஆவணங்களை ஆய்வு செய்த பின்னரே தெரியும்' என, லோக் ஆயுக்தா அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)



# வன்முறையை நிறுத்துவோம்!

வன்முறைகளைத் தடுக்கத் துணிவதில்லை, ஆனால் காணொளிகளாக எடுத்துப் பரப்பும் அளவுக்கு மனம் ஏன் உணர்ச்சியற்றுப் போகிறது?

ஒரு சிறுமி கருவுற்றிருக்கிறாள். அது யாரோ அவளை வன்புணர்ந்ததால் நடந்திருக்கிறது. அவளுக்குத் தேவை மருத்துவ உதவியும், பெற்றோரின் அன்பும் அரவணைப்பும். ஊராரின் அவமானச் சொல்லுக்கு அஞ்சி அன்னை தற்கொலை செய்துகொள்கிறார். தன் பிள்ளைகளைவிட ஊராரின் சொல் அத்தனை பெரிதா? காலம் எதையும் மறக்கடிக்கச் செய்யாதா? மனைவி இறந்த துக்கம் தாளாமல் கணவனும் தற்கொலை செய்துகொள்கிறார். இரண்டு பிள்ளைகளின் நிலையைச் சற்றேனும் நினைத்துப் பார்த்திருந்தால் இப்படிச் செய்திருப்பார்களா? அந்தச் சிறுமி இனி வாழ்நாள் முழுவதும் எப்படி நிம்மதியாக வாழ முடியும்? எத்தனை மனநல ஆலோசனை கொடுத்தாலும் பெற்றோரின் அன்பு திரும்ப வருமா? இது கொடிய வன்முறை அல்லவா?

### கலாசார மாற்றமல்ல, வேறு என்ன?

இது போன்ற வன்முறைகள் அதிகம் நிகழ்வதைக் கலாசார மாற்றம் என்று சொல்லிவிட முடியாது. முன்னெப்போதையும்விட நிறைய பெண்கள் படிக்கிறார்கள். பேருந்தில் ஏறிச் செல்லவே அனுமதி மறுக்கப்பட்ட காலம் ஒன்று உண்டு. இன்றோ அமெரிக்க நாட்டின் துணை அதிபராகக்கூட பெண் இருந்தார். பிரதிநிதிகள் சபை சபாநாயகராகப் பெண், இந்தியாவின் பிரதமராக, பெப்சியின் தலைமைப் பொறுப்பில், விண்வெளியில் சாகசம் செய்யாத துறைகளே இல்லை. ஆனாலும் பெண்களுக்கு எதிராக, சிறுவர்களுக்கு எதிராக வன்முறைகள் ஏன் அதிகரிக்கின்றன?

### ஆடை காரணமா?

சிந்தித்துப் பார்ப்போமா? இதைக் கலாசார மாற்றத்தில் அடக்கிவிட முடியாது. வீட்டிற்குச் சென்று கண்ணாடியின் முன் நின்றுகொண்டு இப்போது நீங்கள் அணிந்திருக்கும் ஆடையைப் பாருங்கள். இதில் கண்ணியக்குறைவு எது என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்? அப்படியே நீங்கள் மூன்றாம் வகுப்பில் எடுத்துக்கொண்ட ஒளிப்படம் இருந்தால் அதில் அணிந்துகொண்ட ஆடை, அல்லது 12ஆம் வகுப்பில் அணிந்துகொண்ட ஆடையையும் பாருங்கள். அப்போதெல்லாம் உங்களை யாரேனும் கேலி செய்யாமல் இருந்தார்களா? கேலியோ பாலியல் சீண்டல்களோ இருந்ததென்றால், ஆடை காரணம் அல்லதானே?

இந்தச் சிறுமிக்கும் ஆடையோ அவள் பள்ளிக்குச் சென்ற நேரமோ காரணம் அல்லதானே? பின் அவள் காரணம் இல்லை. பின் அவள் பெற்றோரைச் சாட அக்கம் பக்கத்தினருக்கு என்னதான் காரணம் இருக்க முடியும்? அந்த நாலுபேர்தான் யார்?

### கலாச்சார மாற்றங்கள் எப்படி உருவாகின்றன?

பாப் அல்லது குமார் என்று ஒருவரை எடுத்துக்கொள்வோம். அவர் பூங்காவில் நடந்து செல்லும்போது எதிர்பாராதவிதமாக ஒரு ரப்பர் பாண்டை மிதிக்க நேரிடுகிறது. அதைக் கையில் அணிகிறார். அந்த நிறத்தால் கவரப்பட்டு பலரும் அது என்ன என்று கேட்க, அது ரப்பர் வளையல் என்று கூறுகிறார். அது போல 20 பேர் அணிய, பிறகு 200 பேர் அணிகிறார்கள். அதை ஓர் உடல்நல வளையலாக, பல வண்ண நிற ரப்பர் வளையலாக லான்ஸ் ஆர்ம்ஸ்ட்ராங் விற்பனை செய்ய, 200 லட்சம் பேர் அணிய அது கலாசாரமாக மாறுகிறது. ஒவ்வொரு திறனைக் கடக்க ஒவ்வொரு நிற வளையல் என லான்ஸ் ஆர்ம்ஸ்ட்ராங் இணையதளம் ஊக்குவிக்க ஆரம்பித்தது. உடல்நலத்திற்கு உடல்நலப் பயிற்சி, கலாசார மாற்றம். பிறகு நட்பு வளையல்கள், பிறகு அதே போல ஏகப்பட்ட வளையல்கள். அது ஒரு வியாபாரமாகவே மாறிவிட்டது.

### வன்முறை எப்படிப் பரவுகிறது?

நீங்கள் திரைப்படங்கள் பார்ப்பதுண்டா? ஏதோ ஒரு சிவப்புப் புள்ளி காட்டி, அது ஒரு தொற்று நோய்க் கிருமியாக ஏதோ ஓர் ஊரில் இருப்பதும், அது திடீரென 100, 1000, 10000 ஆக பெருகுவது போலவும், பல முகமூடி அணிந்த அறிவியலாளர்கள் கவலையோடு அங்குமிங்கும் பரபரப்பாக அதை அழிப்பது போல ஆய்வு செய்வதாகவும் கண்டதில்லையா?

இல்லை, ஒரு தீவிரவாதம் பரவுவதைப் போல, அதை அழிக்க முயல்பவர்கள் அதிபருடன் பேசுவது போலவும் அதை அழிக்காவிட்டால், அகில உலகமே அழிந்துவிடும் என்று பேசுவது போன்ற காட்சிகளைக் கண்டதில்லையா? இப்போது வன்முறைகள் அந்த சிவப்புப் புள்ளிகள் போலத்தான் பரவுகின்றன.



கடந்த காலத்தில் கோவிட் தொற்றுகூட அப்படித்தான் பரவியது. ஆனால், அதற்கான தடுப்பூசியும், அதற்கான முகாம்களும் அதைத் தடுத்தன.

### வண்ணத்துப்பூச்சி விளைவு – நல்ல செயல்களின் அலைகள்.

இயற்கையில் ஒரு சிறிய வண்ணத்துப்பூச்சி அமேசான் காட்டில் இறக்கை அசைத்தால், அந்தச் சிறிய காற்று அலைகள் தொடர்ச்சியாகப் பெருகி, வாரங்கள் கழித்து ஜப்பானில் ஒரு சூறாவளியாக மாறலாம் என்பது அறிவியல் உண்மை. இதைத்தான் 'வண்ணத்துப்பூச்சி விளைவு' என்கிறார்கள். இது வெறும் கற்பனை அல்ல, அறிவியல் பூர்வமான காரண-விளைவு தொடர்பு.

சென்னையில் சில ஆண்டுகளுக்கு முன், இளம் பெண் ஒருவர் மேல்நிலைப் பள்ளியில் பாலியல் கல்வி பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியைத் தொடங்கினார். ஆரம்பத்தில் ஒரு பள்ளியில் மட்டுமே அவர் பேசினார். அப்போது பலர், 'இதெல்லாம் நம் கலாசாரத்துக்கு ஒத்து வராது' என எதிர்த்தனர். ஆனால், அவர் தளரவில்லை. ஒரு மாணவி, அவரிடம் வந்து, 'எனக்கு ஒரு பிரச்சினை, ஆனால் யாரிடம் சொல்வதென்று தெரியவில்லை' என்று தனிப்பட்ட முறையில் உதவி கேட்டாள். அந்தச் சிறுமிக்கு உதவி செய்த பின், அவர் இப்படி எத்தனை பேர் இருப்பார்கள் என்று யோசித்தார்.

அவர் அமைத்த 'பாதுகாப்பான கல்வி' என்கிற அமைப்பு இன்று தமிழகம் முழுவதும் 500க்கும் மேற்பட்ட பள்ளிகளில் செயற்படுகிறது. ஒரு சிறு செயல், ஆயிரக்கணக்கான குழந்தைகளைக் காப்பாற்றியது. இது வண்ணத்துப்பூச்சி சிறகடிப்பதைப் போல, சிறிய செயல் பெரிய மாற்றத்தை உருவாக்கியது.

### தீர்வு என்ன?

அது போல வன்முறைகளைத் தடுக்கும் நிகழ்ச்சிகளும் செயல்களும் பரவ வேண்டும். ஒவ்வொரு சிவப்புப் புள்ளிக்கும் எதிராக ஒரு சின்ன பச்சைப் புள்ளி நிகழ்வும் நடக்குமானால், அது எத்தனை சிறியதாக இருந்தாலும் நாளடைவில் வன்முறை நிகழ்வுகள் குறையும்.

கேரளாவில் நடந்த ஒரு சம்பவம் இதற்குச் சிறந்த உதாரணம். ஒரு பேருந்தில் ஒரு பெண்ணைத் தொந்தரவு செய்த ஆணை அருகில் இருந்த இளைஞர் ஒருவர் தட்டிக்கேட்டார். பயணிகள் அனைவரும் மௌனமாக இருந்தனர். ஆனால், இந்த இளைஞரின் செயல் அந்தப் பெண்ணை மட்டுமல்ல, பேருந்திலிருந்த மற்ற பெண்களுக்கும் பாதுகாப்பு உணர்வைக் கொடுத்தது. அடுத்த நாளே, அதே பேருந்தில் இன்னொரு தொந்தரவு நடந்தபோது, மூன்று பேர் கைகளை உயர்த்தி எதிர்த்தனர். இது பச்சைப் புள்ளியின் விரிவாக்கம். இந்தச் சிறிய எதிர்ப்புகளே சமூகத்தின் பேராற்றலாக மாறுகின்றன. தற்கொலை செய்பவர்களின் செயல்களை 'மானத்தைக் காக்க உயிர்துறந்த வீரர்கள்' என்று பாராட்ட வேண்டாம். அதற்காக உயிரிழந்தவர்களின் செயல்களைப் பரவச் செய்ய வேண்டாம். சமூக வலைதளங்களில் அநாவசியமாக எழுதிப் பாராட்டாமல் இருந்தாலே போதும். வன்முறையை நிறுத்த வழிப்போக்கராகச் சின்ன செயலாக இருந்தாலும் செய்ய ஆவணச் செய்தால், அல்லது அதற்கான விழிப்புணர்வு ஏற்படச் செய்தால் போதும்.

ஒவ்வொரு சிறிய நல்ல செயலும், வண்ணத்துப்பூச்சியின் சிறகடிப்பைப் போல, பெரிய அலைகளை உருவாக்கும். சிவப்புப் புள்ளிகளுக்கு எதிராகப் பச்சைப் புள்ளிகளை உருவாக்குவோம்.



# சிரியாவுக்கான பொருளாதார தடைகளை நீக்கினார் டிரம்ப்

சிரியாவில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருப்பதால் அந்நாட்டின் மீது, 20 ஆண்டுகளுக்கும் மேலாக விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளை விலக்கிக் கொள்வதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

மேற்காசிய நாடான சிரியா கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக ஆசாத் குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது அந்நாடு பயங்கரவாதத்தை ஆதரிப்பதாக கூறி அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது.

கடந்த, 1979ல் துவங்கிய இந்த பொருளாதார தடைகள், 2004 முதல் கடுமையாக்கப்பட்டன. அப்போது பஷார் அல் ஆசாத் சிரியாவின் அதிபராக பதவியேற்றிருந்தார்.

மழையின்போது உடைக்கப்பட்ட மைய தடுப்பு சீரமைப்பது எப்போது?

பஷார் அல் ஆசாத்திற்கு எதிரான உள்நாட்டு போர் கடந்த ஆண்டு தீவிரமடைந்தது. கிளர்ச்சியாளர்களுக்கு அகமது அல் ஷாரா தலைமை தாங்கினார். இந்த கிளர்ச்சிப் படைகள் கடந்த டிசம்பரில் சிரியா முழுதையும் கைப்பற்றின. இதனால் பஷார் அல் ஆசாத் நாட்டை விட்டு தப்பி ரஷ்யா சென்று தஞ்சமடைந்தார்.


அதன் பின் புதிய இடைக்கால அதிபராக அகமது அல் ஷாரா பதவியேற்றார். இவர் மேற்காசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்த அமெரிக்க அதிபர் டிரம்பை சவுதியில் நேற்று முன்தினம் சந்தித்தார்.

சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் இதற்கு ஏற்பாடு செய்தார். இந்த சந்திப்பு 33 நிமிடங்கள் நீடித்தது. அதன் பின் சிரியா மீதான பொருளாதார தடைகளை விலக்குவதாக டிரம்ப் அறிவித்தார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக சிரியா மீது அமெரிக்கா பொருளாதார தடைகளை விதித்தது. இப்போது சிரியா முன்னேற வேண்டும் என்பதால் அந்த தடைகளை நீக்க உத்தரவிடுகிறேன். தற்போது சிரியாவிற்கு முன்னேறும் நேரம் வந்துவிட்டது. சிரியா மீண்டும் அமைதியும், வளர்ச்சியும் அடைந்த நாடாக மாறும்' என்றார். (ஐ)



## நீரவ் மோடியின் ஜாமின் மனுவை தள்ளுபடி செய்தது நீதிமன்றம்



வங்கி மோசடி வழக்கில் பிரிட்டனில் கைது செய்யப்பட்ட தொழிலதிபர் நீரவ் மோடியின் ஜாமின் மனுவை லண்டன் நீதிமன்றம் மீண்டும் தள்ளுபடி செய்தது.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் ரூ.6,498.20 கோடி கடனை பெற்று, அதனை திருப்ப செலுத்தாமல் வைர வியாபாரி நீரவ் மோடி பிரிட்டனுக்கு தப்பி சென்று விட்டார். பிறகு, சி.பி.ஐ., அளித்த புகாரின் பேரில், கடந்த 2019ம் ஆண்டு பிரிட்டன் போலீசாரால் கைது செய்யப்பட்டு வேண்ட்ஸ்வெர்த் ஜெயிலில் அடைக்கப்பட்டார்.

அவரை இந்தியாவுக்கு நாடு கடத்துவதற்கான சட்ட நடவடிக்கைகளை சி.பி.ஐ., மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பான வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இந்த நிலையில், தனக்கு எதிராக கொலை முயற்சி நடப்பதாகக் கூறி, இந்த வழக்கில் இருந்து தன்னை ஜாமினில் விடுவிக்கக் கோரி நீரவ் மோடி தாக்கல் செய்த மனுவை லண்டன் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இது அவரது 10வது ஜாமின் மனுவாகும். (ஐ)

## டிக்டாக் நேரலையில் மாடல் அழகி சுட்டுக்கொலை் மெக்சிகோவில் அதிர்ச்சி



மெக்சிகோவில் டிக்டாக் நேரலையின் போது மாடல் அழகி ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜலிஸ்கோ மாநிலத்தில் உள்ள ஜபோபான் எனும் பகுதியில் பியூட்டி சலூனில் பணியாற்றி வந்தவர் வலேரியா மார்க்வெஸ். 23 வயதான இவர், டிக் டாக் மற்றும் இன்ஸ்டாகிராமில் 2 லட்சம் பாலோவர்ஸ்களுடன், சமூக வலைதளத்தில் மிகவும் பிரபலமானவராக திகழ்ந்து வந்துள்ளார்.

தான் செய்யும் மேக்கப் பணி குறித்த வீடியோக்களை சமூகவலைதளங்களில் பதிவிட்டு வந்துள்ளார். அவ்வப்போது, நேரலையில் தனது பாலோயர்களுடனும் பேசுவதை வழக்கமாக கொண்டிருந்துள்ளார்.

இந்த நிலையில், வலேரியா மார்க்வெஸ் தான் பணியாற்றும் சலூனில் இருந்து, டிக்டாக் நேரலை செய்து கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த மர்ம நபர், வலேரியாவை சரமாரியாக சுட்டுக்கொன்றுள்ளார். இது டிக் டாக் நேரலையில் அப்படியே ஒளிபரப்பானது. இதனைக் கண்ட அவரது பாலோவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, அவரது செல்போனை எடுத்த நபர், தனது முகத்தை நேரலையில் காட்டியுள்ளார்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், அந்த நபர் குறித்து விசாரித்து வருகின்றனர். மேலும், பாலின வன்முறை காரணமாக இந்தக் கொலை அரங்கேற்றி இருக்கலாம் என்றும் கூறுகின்றனர்.

லத்தீன் அமெரிக்கா நாடுகளில் பெண்கள் மீது பாலினத்தின் அடிப்படையில் தொடர் தாக்குதல் நடத்தப்பட்டு வருவது அதிகரித்துள்ளது.

மெக்சிகோவில் உள்ள 32 மாநிலங்களில், அதிக கொலைகள் நடக்கும் மாநிலங்களில் ஜலிஸ்கோ 6வது இடத்தில் உள்ளது. ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் பதவியேற்றதிலிருந்து கடந்த 2024ம் ஆண்டு முதல் 906 கொலைகள் நடந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## இஸ்ரேலுக்கு எதிரப்பு அமெரிக்க செனட் சபையில் போராட்டம்

இஸ்ரேலை தங்கள் நாடு ஆதரிப்பதை எதிர்த்து, அமெரிக்க செனட் சபையில் போராட்டம் நடத்தியவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அமெரிக்காவின் செனட் சபையில் சுகாதார செயலாளர் ராபர்ட் கென்னடி, மத்திய சுகாதார நிறுவனங்களின் மறுசீரமைப்பு குறித்து விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது, அவரது இருக்கைக்குப் பின்புறம் அமர்ந்திருந்த பென் அன்ட் ஜெர்ரி என்ற ஐஸ் கிரீம் நிறுவனத்தின் நிறுவனரும், சமூக ஆவலருமான பெனா கோஹென் உள்பட 6 பேர், அமெரிக்காவுக்கு எதிராக திடீரென கோஷத்தை எழுப்பினர்.

காசாவில் குழந்தைகளை கொன்று குவித்து வரும் இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்குவதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து, குண்டுகட்டாக அவர்களை தூக்கிச் சென்று போலீசார் கைது செய்தனர். இதனால், செனட் சபையில் பரபரப்பு நிலவியது.

பெனா கோஹென் உள்ளிட்டோர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டால், அவர்கள் 90 நாட்கள் சிறை தண்டனை, 500 அமெரிக்க டாலர்கள் அபராதம் செலுத்த வேண்டியிருக்கும். அல்லது இரு தண்டனைகளை சேர்த்து அனுபவிக்க வேண்டியிருக்கும்.

இது குறித்து பெனா கோஹென் விடுத்த பதிவில், 'குண்டு வாங்கி, காசாவில் உள்ள ஏழைக் குழந்தைகளை கொல்கிறார்கள் என்று நான் காங்கிரஸிடம் கூறினேன். ஆனால், அமெரிக்காவில் ஏழைக் குழந்தைகளை மெடிகெய்ட் திட்டத்தில் இருந்து நீக்கி, அந்தப் பணத்தை இந்த வன்முறைக்கு பயன்படுத்துகின்றனர்,' என்று குறிப்பிட்டிருந்தார்.

பெனா கோஹென் போலீசாரால் கைது செய்யப்படுவது இது முதல்முறையல்ல. கடந்த 2023ம் ஆண்டு விக்கி லீக்ஸ் இணை நிறுவனர் ஜூலியன் அசாஞ்ச் சிறையில் அடைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியதற்காகவும் கைது செய்யப்பட்டிருந்தார். (ஐ)



## திருமலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்படி நபர் அணிந்திருந்த சேட் மற்றும் சாரம் ஆகியவற்றை வைத்து ,து தனது தந்தை என மகள் அடையாளம் காட்டியுள்ளார் எனவும், அந்த நபர் காணாமல்போயுள்ளார் என்று அவரது குடும்பத்தினரால் சுமார் 10 நாட்களுக்கு முன்னர் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இனப்படுகொலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறைக்க முடியாது.” - என்று நாடாளுமன்ற உறுப்பினரும் ,லங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ். நெடுந்தீவில் நேற்று நடைபெற்ற குமுதினிப் படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் பங்குகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“குமுதினிப் படகில், குருநகர் கடலில், கொக்கட்டிச்சோலையில், சத்துருக்கொண்டானில், வாகரையில், நவாலியில், நாகர்கோயிலில் தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை கொத்துக்கொத்தாக எங்களைக் கொன்றொழித்துவிட்டு, ஈழத்தில் இனப்படுகொலை நடைபெறவே ,ல்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தும், நாமல் ராஜபக்ஷவும், அலி சப்ரியும் தெரிவித்துள்ள கருத்துக்கள் உலகத்தின் மனச்சாட்சியை உலுக்கத்தக்க, சிங்கள வல்லாதிக்க வெளிப்பாட்டுக்குரியவை. அத்தகைய கருத்துகளை முன்வைத்தோர்க்கு எதிராக நான் எனது வன்மையான கண்டனங்களைப் பதிவு செய்கின்றேன்.

இத்தகைய இனவாதம்கொப்பளிக்கும்இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு மத்தியில், ஈழத்தில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதற்கான சர்வதேச சாட்சியமாக, பிரம்டனில்இனப்படுகொலை நினைவுத்தூபியை நிறுவிய கனேடியப் பிரதமர் மாண்புமிகு மார்க் ஹனி, பிரம்டன் நகர மேயர் கௌரவ பற்றிக் பிரவுண் ஆகியோரோடு, இதற்குக் காரணமான அனைவருக்கும் எமது நன்றிகள்.

காலங்காலமாக எங்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலையின் கறைபடிந்த வரலாற்றின் நாளான குமுதினிப் படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தலில், வலிசுமந்த நெடுந்தீவு மண்ணிலிருந்து மேற்படி இருவருக்கும் நன்றிகளைப் பகிரங்கமாகத் தெரிவிக்கின்றேன்.” - என்றார்.

## பகிடிவதையால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தைச் சேர்ந்த 23 வயதுடைய மாணவனே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விட்டு விலகி கட்டுமானப் பணிகள் இடம்பெற்ற இடத்தில் வைக்கப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் மீது மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது வானில் பயணித்த ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுமதிக்கமைய நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவால் தற்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதிய மசோதாவை அறிமுகப்படுத்துவதானது, நவீன உலகளாவிய பயங்கரவாத சவால்களை எதிர்கொள்வது, உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தனிநபர்களின் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளைக் கடைப்பிடிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அதற்கமைய பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை இன்று (16) முதல் 14 நாட்களுக்குள் செயலாளர், நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சகம், எண். 1க்கு அனுப்பி வைக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடித உறையின் இடது மூலையில் ‘பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கான பரிந்துரைகள்’ எனக் குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பரிந்துரைகள் அடங்கிய கடிதங்களை நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு அல்லது legal@moj.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# பொலிஸாரின் திடீர் பரிசோதனையில் சிக்கிய 11 பேருந்துகள்!

*நீண்ட தூர போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளை விசேட பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவுறுத்தியமைக்கு அமைவாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பேருந்துகளை பரிசோதிக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட டுள்ளது.*

*அதன்படி இன்றையதினம் ஹட்டனில் இருந்து நீண்ட தூர போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகள் கினிகத்தேன பொலிஸாரால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.*

*ஹட்டன்-கண்டி பிரதான வீதியில் உள்ள கினிகத்தேனவின் அம்பகமுவ பகுதியில் நீண்ட தூர போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.*

*இதன்போது பயணிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும்வகையில்குறைபாடுகளுடன் இயக்கப்பட்ட ஐந்து இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள், ஆறு தனியார் பேருந்துகள் உட்பட 11 சாரதிகள் மீது ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*மேலும் சில பேருந்து சாரதிகளுக்கு குறைபாடுகளை சரிசெய்ய உத்தரவுகள் வழங்கப்பட்டன.*

*குறித்த பேருந்து பரிசோதனை நடவடிக்கையின் போது, பயணிகளை விழிப்புணர்வு செய்யும் வகையில் பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்தனர். அதன்படி, பேருந்து சாரதிகள் போக்குவரத்து விதிகளை மீறுவது தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.*

# யோஷித, டெய்சி பாட்டிக்கு எதிரான மனு மீதான விசாரணை ஜூலை மாதம் 11 இல்

கொழும்பு, மே 16

யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிரான மனு எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று வெள்ளிக்கிழமை உத்தர விட்டுள்ளது.



இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது நீதிமன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ் இந்த மனு தொடர்பான சாட்சியங்களை நீதிமன்றில் முன்வைத்திருந்தார்.

யோஷித ராஜபக்ஷ மற்றும் அவரது பாட்டியான டெய்சி பொரெஸ்ட் ஆகியோருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணி சம்பத் மெண்டிஸ்ஸினால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களைக் கருத்தில்கொண்ட நீதிவான் இந்த மனு எதிர்வரும் ஜூலை மாதம் 11 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று உத்தரவிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

# முகாமைத்துவ பீட புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வுகள் இன்று ஆரம்பம்
















யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான திசைமுகப ்படுத்தல் நிகழ்வு இன்று 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என்.கெங்காதரன் தலைமையில், கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

2023 ஆம் ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் 2024ஃ2025 ஆவது கல்வி ஆண்டில் தொழில் நிருவாகமாணி மற்றும் வணிகமாணி கற்கைநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட 540 மாணவர்களும், பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பதிவாளர், நிதியாளர் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர் நலனோம்புப் பிரிவி சிரேஷ்ட உதவிப்பதிவாளர் உட்படப் பலரும் இவ் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டனர்.


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சநேயர் கோவில்
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
தொடர்புகளுக்கு: 0777 43 5557
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!